# <u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>
## <u>CC No.130/2016</u>

## <u>DEPOSITION OF WITNESS</u>
## <u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : Prakash |
| Father/Husband's Name | : Kanniyappan |
| Village | : |
| Taluk | : Pazhaveli |
| Calling | : |
| Age | : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.02.2026.

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள், தேதி, மாதம் ஞாபகமில்லை. எனது ஊரான பழவேலியில் திருவிழா நடந்து கொண்டிருந்தபோது, அப்போது, அருகில் 20க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள். அவர்களில் யாரோ ஒருவர் அடித்துவிட்டார். அந்த இடத்தில் ஆஜர் எதிரியும் இருந்தார். அவர் தான் அடித்திருப்பார் என்று நினைத்து அவர் மீது புகார் கொடுத்துவிட்டேன். தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்கை மேல் நடத்தவிருப்பமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 07.05.2016ம் தேதியன்று பகல் 2.30மணியளவில் பழவேலி கிராமத்தில் ஸ்கூல் தெருவில் நின்றிருந்தபோது, மேற்சொன்ன கிராமத்தை சேர்ந்த ஆஜர் எதிரி பல்சர் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்தார் எனவும், அப்போது தெருவில் குழந்தைகள் விளையாட்டி கொண்டிருந்ததால், அவரை தடுத்து நிறுத்தி, ஏன் வேகமாக ஒட்டுகிறாய் என்று கேட்டதற்கு, நீ என்ன கேக்கிறது, உன் வேலைய பார்றா என்றும் ஓத்தா

தேவிடியா என்று  அசிங்கமாக திட்டி, உன்ன காலி பண்ணிடுவேன் என்று மிரட்டினார் என்றும், பின்னர் மீண்டும் வந்து பாட்டிலால் என் தலையில் அடித்தார் என்றும், அப்போது அருகில் இருந்தவர்கள் என் தலையில் ரத்தம் வருவதை பார்த்து அருகே வந்த போது, ஆஜர் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும், அது சம்பந்தமாக 08.05.2016 அன்று புகார் கொடுத்த போது, ஆஜர் எதிரி நான் பெரிய ரவுடி என் மீதே புகார் கொடுக்கிறாய் என்று கூறி, ஒத்தா தேவிடியா என்று  அசிங்கமாக திட்டி, ஒரு பெரிய கத்தியுடன் என்னை யாராவது பிடிக்க முயன்றால், குத்திவிடுவேன் என்று மிரட்டினார் என்றும், அங்கிருந்த ஊர் மக்கள் அவரை பிடிக்க முயன்றபோது, அருகில் இருந்த சமுதாய கூடத்தில் உள்ளே நுழைந்து, அதன் மதில் சுவர் மீது ஏறி, கீழே குத்ததில், அவர் கால் உடைந்துவிட்டது என்றும், இது சம்பந்தமாக புகார் கொடுத்து விட்டு, எதிரி  ஊர்காரர் என்பதாலும், அவருடன் சமாதானமாக சென்றுவிட்ட படியாலும், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.